போர்வாள்

...திராவிடர் வார வெளியீடு...

வாள்	திருவள்ளுவர் ஆண்டு 1979 ஆடி 9	வீச்சு
1	24-7-48 சனிக்கிழமை	48

ஆசிரியர்கள்:

ஒவ்வொரு திராவிட மாணவனும் அவினாசியார் திட்டத்தின்படி இந்தி அல்லது சமஸ்கிருதம் இரண்டில் ஒன்றிற்கு இரையாகியே தீரவேண்டும் !

மங்கைமார் போர் முரசு!

[1938-ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் தோழியர் உலகு அதிதீவிரப் பங்குகொண்டது. இந்நாள், அதனினும் பெரும் பங்கு கொள்ள மாதர் கூட்டம் 'தயார்' கூறி நிற்கிறது. இந் நாள் போராட்டத்தில் அவர்கள் பெறக் கூடிய பங்கையும், அன்று அவர்கள் ஆற்றிய அறப்போர்த் திறத்தையும் தெளிவுற விளக்குவது, அக்காலத்தில்தோழியர் வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார் அவர்கள் ஆற்றிய இந்த அரிய சொற்பொழிவு :—]

ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன் கண்ணகி என்னும் வீரத் தமிழ்ப்பெண் தனக்குத் தீங்கிழைத்த பாண்டிய அரசனையும் அவனது நகரத்தையும் தனது கற்பின் ஆற்றலால் அழித்துச் சோகமளாவிய முகத்தினளாய் வஞ்சி நாடு புகுந்தாள். அதுபோல இன்று நம்மிடை ஒருபெண் அடைக்கலம் புகுந்திருக்கிறாள். அவள் நம்மையெல்லாம் பெற்றதாய். நான் மேலெடுத்துக் காட்டிய கண்ணகிக்கும் அவள்தான் தாய். இவ்வுலகத்துக்கே அவள்தான் முதல் தாய் என்று சொன்னாலும் குற்றமாகாது. இவ்வளவு வயது நிரம்பியும் அவள் தனது இளங் கன்னிக் கோலம் மாறாதிருக்கிறாள். ஆனால் அவளது கலை உரியப்பட்டிருக்கிறது. அவளது செம்பொன் போன்ற திருமேனியில் அம்மைத் தழும்புகளும் காயவடுக்களும் காணப்படுகின்றன. அவள் முகத்தில் அவலக்குறி தோன்றுகிறது. அவளது திருக்கரங்களில் விலங்கு பூட்டப்பட்டிருக்கிறது. தாயாகிய அவளைக் காப்பது மக்களாகிய நமது கடமையல்லவா? அவளுடைய கைவிலங்குகளைக்களைந்தெறியவும், அவளுடைய கலையைச் சீர்திருத்தி அவளுக்கு ஒப்பனை செய்யவும், உடம்பிலுள்ள மாசைத் துடைக்கவும், அன்னைமீர், விரைந்து வம்மின்!

என் அருமைச் சகோதரிகளே! நாம் இன்று கூடியுள்ள மகாநாட்டைப்போல் தமிழ் நாட்டு வரலாற்றில் இதற்குமுன் வேறு எப்போதும் கூடியதில்லையென்று துணிந்து கூறுவேன். இம் மாநாட்டைக் கூட்டியதன் நோக்கம் இன்னதென்று நான் உங்களுக்கு விரிவாகக் கூறவேண்டியதில்லை. அதைத் தெரிந்தே நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். சுருங்கச் சொன்னால், தமிழர் சமூகம் அடியோடு மாண்டு போகாமல் காப்பதற்காகத் தமிழர்களை அவர்களுடைய பேருறக்கத்தினின்றும் சிறிது தட்டியெழுப்புவதில் நம்மாலான உதவியைச் செய்வதுதான் இம்மாநாட்டின் நோக்கமாகும். தற்போதைய தமிழர்களின் சீர்கேடுற்ற நிலைமையை ஒரே வாக்கியத்தில் கூறவேண்டுமானால், "தமிழர்கள் தங்களது சொந்த நாட்டில் உரிமை உணர்ச்சியுடன் தலைநிமிர்ந்து நடக்கமுடியாத நிலைமையிலிருக்கிறார்கள்" என்று சொல்லலாம்.

தமிழர்கள் என்று தாய்மொழியாகிய தமிழைப்போற்றாமல் விட்டார்களோ அன்றே அவர்களுக்கு அடிமைத்தளை பூட்டப்பட்டது. தங்களுடைய பண்டைப் பெருமைகளை அவர்கள் மறந்து விட்டார்கள். தங்களுக்கேயுரிய கலை, பண்பு, நாகரிகம் முதலியவைகளை அறவே கைந் நழுவவிட்டுத் தமக்கு எவ்வாற்றானும் ஒவ்வாத பிறநாட்டுப் பழக்க வழக்கங்களை மேற்கொண்டு இன்னலுறுகின்றனர். தமிழ்ச் சான்றோர்களையும் அவர்கள் இயற்றும் நூல்களையும் தமிழர்கள் பாராட்டுவதில்லை. தங்கள் முன்னேற்றத்தைக் கருதி நடத்தப்படும் இயக்கங்களுக்கு ஆதரவளிக்காமல், தங்களுடைய அடிமை விலங்கைப் பின்னும் இறுக்குவதற்காக மாற்றார் செய்யும் வஞ்சனைச் சூழ்ச்சிகளில் சிக்கி அம்மாற்றாருக்குப் பொருளுதவி செய்கிறார்கள்

நாம் நமது தாய்மொழியை விழிப்புடன் போற்றாத காரணத்தால், அதன் புனிதத் தன்மை கெட்டுவிட்டது. தமிழ் இலக்கணத்துக்கும் பண்புக்கும் எவ்வாற்றானும் ஒவ்வாத அயல் மொழிச் சொற்கள் ஏராளமாக வந்து அதில் கலந்து விட்டன. பட்டணத்துப் பால்காரர்கள் பாலில் தண்ணீரைக் கலப்பதில்லையாம். தண்ணீரில் தான் பாலைக் கலப்பார்களாம். அதுபோல இக்காலத்தில் தமிழ் இலக்கண இலக்கியங்களை அறிதின் முயன்று கல்லாத சிலபேர் "தமிழ் எழுத்தாளர்" என்று தம்மைச் சொல்லிக்கொண்டு எழுதும் விபரீத நடையை நீங்கள் பார்ப்பீர்களானால், அதில் எத்தனைத் தமிழ்ச் சொற்கள் இருக்கின்றன வென்று விரல்விட்டு எண்ணவேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம்.

எடுத்துக் காட்டாக சில மாதிரிகளைப் பாருங்கள் :—'பெருமையடித்துக் கொள்ளுதல்' 'என்ன ஸார்வாள், எங்கே போறயள்', ரொம்ப,' 'ஜிஞ்ஜாமிர்தமாக', 'எனக்குக் கொடுத்துவைக்கவில்லை', 'தொபுகடீரென்று', 'தாம்தடாகா,' 'கப்சிப்,' 'கப்ஸா,' 'கமலா'ஸ் காதல்,' 'கச்சேரி or காலட்சேபம்', 'லேடீஸ் க்ளப்'— போதுமா, இன்னும் வேண்டுமா? "சிவ சிவ, போதும் போதும்" என்கிறீர்கள். சரி நிறுத்திவிட்டேன். இப்படித் தமிழன்னையைப் பையப் பையச் சாகவடிக்கும் இந்த "எழுத்தாளர்"கள்தான் உயிருள்ள தமிழ் நடை எழுதுபவர்களாகக் கருதப்படுகிறார்கள். இவர்கள் இந்தத் தமிழ் நடையைத் தமிழ் நாட்டில் மட்டும் பரப்பினால் போதாதென்று கருதி, உலகமெங்கும் பரப்புவதற்காக இவர்களுக்கு அகில இந்திய ரேடியோவில் பேசுவதற்கு அடிக்கடி இடம்கொடுக்கப் படுகிறது. இதற்கு மாறாக, வாழ்நாள் முழுதும் தமிழ் பயின்று இலக்கண இலக்கிய வரம்புகளுக்குட்பட்டுச் செந்தமிழ் நடை எழுதும் அறிஞர்கள் பத்தாம் பசலிக் காரர்களென்று பரிகசிக்கப் படுகிறார்கள். இவர்கள் தமிழைக்கொலை செய்பவர்களாம். எப்படியிருக்கிறது சங்கதி? இதற்கு விமோசனம் இல்லையா? என்று தான் கேட்கிறேன். இந்த நிலைமையில், இந்தி வேறு வந்துபுகுந்தது. இவ்வளவு காலத்துக்குப் பிறகு, தமிழ்நாட்டுப் பாடசாலைகளில் சிறுவர்களுக்கு இந்தியைக் கட்டாயப் பாடமாக வைக்கக்கூடாதென்பதற்குரிய காரணங்களை நான் சொல்லிக் கொண்டுபோனால் கொல்லன் தெருவில் ஊசி விற்பதற்குச் சமானமாவது மல்லாமல், என்னைப் பித்துப்பிடித்தவளென்றும் நீங்களெல்லாம் ஏசுவீர்கள். இந்தி எதிர்ப்

புப் பேச்சைக் கேட்டுக் கேட்டுக் காதெல்லாம் சலித்துப் போய்விட்டது. நீங்கள் கேட்டு என்ன பயன்? அதைக் கேட்கவேண்டியவர்கள் தான் அதைக்கேட்கக்கூடாதென்று காதைப் பொத்திக்கொள்ளுகிருர்களே. அது நிற்க,

கட்டாய இந்தி நுழைவால் வடநாட்டாருடைய ஆதிக்கம் தென்னுட்டில் விரும்பத் தகாத அளவுக்கு அதிகரிக்கும். தமிழ் நாட்டார் தங்கள் நாட்டிலேயே அடிமைகளாகக் கருதப்படுவார்கள் என்னும் உண்மையைச் சொன்னுல், மாகாணத் துவேஷக் குற்றம் நம் மீது சாட்டப்படுகிறது. நாம் ஏறக்குறைய 150 ஆண்டுகளாக ஆங்கிலம் பயின்று வருகிறேம். இவ்வளவு காலத்துக்குப் பிறகும் நம்மில் ஆங்கிலத்தில் பெரிய பட்டம்பெற்ற ஒருவர் பேசுவது, கல்வி யறிவில்லாத ஒரு சாமானியமான ஆங்கிலப் போர்வீரன் பேசுவதற்கு ஈடாகாதென்று கருதப்படுகிறது. ஒன்றரை நூற்றுண்டு ஆங்கிலப் பயிற்சிக்குப் பிறகும், நம்தென்னிந்தியாவில் ஒரு இராமசாமி முதலியோரோ, ஷண்முகம் செட்டியாரோ, சீனிவாச சாஸ்திரியாரோ, ராமலிங்க ரெட்டியாரோ, ராதாகிருஷ்ணனே தான் நன்ருக ஆங்கிலம் பேசுபவர்களென்று புகழ்பெற்றிருக்கிருர்கள். அதுவும் நமது ஆசையினுல் தான் நாம் அவர்களை நன்கு மதிக்கிறேம். நாம் மதிப்பதுபோல ஆங்கிலேயர்கள் இவர்களை மதிப்பதில்லை. இது இயற்கை தானே!

ஒரு வெள்ளைக்காரனே வடநாட்டானே தெலுங்கனே எவ்வளவு தான் தமிழில் வல்லவனுயிருந்த போதிலும் அவன் தமிழ் பேசும் போது நாம் சிரிக்கத் தானே செய்கிறேம். அதுபோல, இந்திமொழி இப்போது தென்னுட்டில் கட்டாயப் பாடமாகி, பிறகு அரசாங்க மொழியாய்விட்டால், நாம் எவ்வளவு அரிதின் முயன்று அம்மொழியைக்கற்ருலும், அதைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள வடநாட்டாருடைய புலமையை நாம் அடைய முடியாது. அவர்கள் மொழி சிறக்கவே, அவர்களும் எல்லாவற்றிலும் சிறப்படைவார்கள். பிறகு நாம் அவர்களுக்கு அடிமையாவதில் என்ன தடை இருக்கிறது? இச்சிறிய உண்மை நமது அரசாங்கத்தினருக்குப் புலப்படாமற் போனதுதான் விந்தையிலும் விந்தை!

அன்னைமீர்! நீங்கள் யார்? வாழையடி வாழையாக வந்த எந்தத் திருக்கூட்டத்தை நீங்கள் சேர்ந்தவர்கள்? என்பவைகளைப் பற்றி இங்கே சிறிது சொல்லுவது பொருத்தமற்றதா யிராதென்று நினைக்கிறேன்.

'பெண்கள் சுதந்தரர்களல்ல, எக்காலத்திலும் அவர்கள் பரதந்திரர்கள்தான், ஆகவே, துறவு நெறியிற் செல்ல அவர்களுக்குத் தகுதியில்லை" என்னும் பிறநாட்டு நூலோரின் கொள்கையைப் பொய்ப்படுத்தி, தனது வீட்டில்கட்டிளங் கன்னிப் பருவத்தில் ஓர் அரச குமாரனுடைய உண்மைக் காதலையும் அற்பமென உதறித் தள்ளி, துறவு நெறி மேற் கொண்டு உலகத்துக்கு வழிகாட்டிய மணிமேகலை உங்கள் இனத்தைச் சேர்ந்தவளே.

'Plain living and high thinking, என்னும் ஆங்கிலப் பழமொழிக்கேற்ப எளிய வாழ்வு வாழ்ந்து உயர்ந்த குறிக்கோள்களைத் தாங்கித் தமிழ்நாடெங்கும் தமது புகழ் பரப்பிய அவ்வையார் தமிழ்த் தாயின் தவப்பெரும் புதல்வியாவர். இவரியற்றிய சுலபமான நீதி நூல்களுக்கு இணையாகச் சொல்லக்கூடிய இலக்கியம் வேறெந்த மொழியிலும் இல்லை.

"பெண்ணுய்ப் பிறந்தவர்களுக்கு வீடு பேறில்லை, அவர்கள் எப்போதாகிலும் ஆணுய்ப் பிறந்துதான் முக்தியடைய வேண்டும். பெண்கள் பிறவியிலேயே மாசுடையவர்கள்' என்னும் கொள்கையைத் தவிடு பொடியாக்கி திருமாலையே தனக்குக் கணவனுக வரித்து, "திருப்பாவை" முதலிய விழுமிய பாமாலைகளை இயற்றி, உடம்புடனேயே வீடுபேறெய்திய ஆண்டாள் உங்கள் குலத்தவள் தான்.

மற்றும், எங்கேயோ போர் முரசு முழங்குவதைக் கேட்டு மகிழ்ந்து, இதற்குமுன் அதே போரில் தனது தந்தையும் கணவனும் தமையனும் நாளுக்கொருவராக மடிந்திருக்கவும், தனக்குள்ள ஒரேவொரு மகனுக்கும் எண்ணெய்தடவித் தலை வாரி, வெண்மையான ஆடை உடுத்து, அவன் கையில் வேல் கொடுத்துப் "போருக்குப்போய்வா" என்று புன்முறுவல் பூத்த முகத்துடன் அனுப்பிய ஒரு தமிழ்ப் பெண்ணைப் பற்றியும், தனது மகன் அன்று நடந்த போரில் புறமுதுகிட்டோடினன் என்று சிலர் சொல்லக் கேட்டு நிலைகுலைந்து, "அப்படியானுல், அவனுக்குப் பாலூட்டிய இரு முலையை அறுப்பேன்" என்று சினந்து வாளேந்திய கையளாய்ப் போர்க்களம் சென்று பார்க்கையில், அங்கே தனது மகன் மார்பகத்தில் புண்ணுடன் இறந்து வீழ்ந்து கிடப்பதைக்கண்டு, அவனைப் பெற்றெடுத்தபோது அடைந்த மகிழ்ச்சியைவிட பெருமகிழ்ச்சி யடைந்த ஒரு பெண்ணைப்பற்றியும் இன்னும் பல வீரத் தமிழ்த் தாயர்களைப் பற்றியும் நீங்கள் புறநானூறு முதலிய சங்க நூல்களில் தெரிந்து கொள்கிறீர்கள்.

அன்னைமீர், உங்கள் குலத்து முன்னேர்களைப்பற்றி நான் சொன்ன அளவிலேயே, உங்கள் முகத்திலுள்ள சோர்வு நீங்குவதை நான் பார்க்கிறேன். அதற்குப் பதிலாக வீரக்களை தோன்றுகிறது. அன்ெருரு நாள் நமது குலத் தலைவியாகிய கண்ணகி என்னும் வீரமாது தனது கணவனைக் கள்வனென்று பாண்டியன் ஒறுத்தானென்னும் சேதியைக் கேட்டுப் பொங்கி எழுந்தாள் "சான்றேரும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்" என்று அரற்றினுள். அவள் பொங்கி எழுந்ததன் பயன் என்னவாயிற்றென்று உங்களுக்குத் தெரியும்.

அதுபோல, இந்த நாட்டில், "சான்றேரும் உண்டுகொல், தெய்வமும் உண்டுகொல்" என்று கண்ணகியைப்போல நாமும் அரற்ற வேண்டிய காலம் வந்துவிட்டது. இன்று நமது தமிழ்த் தாய்க்குத் தீங்கு செய்யப்படுகிறது எனவே, தமிழ்ப் பெண் குழாத்துக்கே கேடு சூழப்படுகிறது. இது கண்டு பொருது நீங்கள் எழுந்தால்..............

தமிழ்நாட்டின் இன்று தோன்றியுள்ள புத் துணர்ச்சி உருவம் பெற்று வந்தாலென்ன விளங்கும் தமிழ்ப் பாவலர் புதுவை பாரதிதாசனது அழகிய பாட்டு ஒன்றின் மூலமாய் உங்களை மீண்டும் ஒரு முறை வரவேற்று என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

"இந்திக்குத் தமிழ்நாட்டில்
ஆதிக்கமாம்—நீங்கள்
எல்லோரும் வாருங்கள்
நாட்டினரே
செந்தமிழ்க்குத் தீமை
வந்த பின்னும்—இந்த
தேகம் இருந்தொரு
லாபமுண்டோ?"

போர்! போர்! அறப்போர்!

அதுவன்றி வேறு பேச்சில்லை இந்நாள்!

சென்னையில் தமிழர் வீரமுழக்கம்!

"தமிழின் இனிமையையும் தொன்மையையும் அழகையும் பற்றி சங்க இலக்கியங்களிலிருந்து மேற்கோள் எடுத்துக் காட்டி விரிவுரை ஆற்றுவதற்கல்ல நாம் இங்கே கூடி இருப்பது! நாம் கூடி இருப்பது போர் தொடுக்க! தமிழ் மொழிக்கு மட்டுமல்ல தமிழ்க் கலாசாரத்திற்கே இன்று ஏற்பட்டுள்ள பேராபத்தைத் தடுப்பதற்கான அறப்போர் தொடுக்க! ஆம்! சர்வ கட்சி முகாம்களிலிருந்தும் வீரத் தமிழர்கள் திரண்டுவந்து குழுமியுள்ள இந்த மாநாட்டிலிருந்து, நம்மை வலுச் சண்டைக்கு அழைக்கும் இந்த மந்திரி சபைக்கு, நாம் **போர் ஓலை** அனுப்புவோம். ஓ அவினாசியாரே! ஓமந்தூராரே! வடக்கத்திய ஏகாதிபத்தியமே! அதன் தலைவர் படேலே! பண்டித நேருவே! அறியுங்கள், தமிழர் போர் தொடுத்துவிட்டனர், போர் தொடுத்துவிட்டனர், போர் தொடுத்துவிட்டனர், என்று எழுதுவோம் அந்த ஓலையில். நாம் அனைவரும் அதில் கையெழுத்துப் போட்டுவிட்டு போர்க்களம் புகுந்திடத் 'தயார்' கூறி நிற்போம்."

—**அறிஞர் அண்ணாதுரை** இந்த வாக்கியங்களை வீசியபோது, ஆம்! ஆம்! அதுவன்றி வேறு பேச்சில்லை என்று இடி முழக்கமிட்டது ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட அளவில் கடலெனத் திரண்டு குழுமியிருந்த தமிழர் கூட்டம். ஆம்! சென்னையில்! மாகாண இந்தி எதிர்ப்பாளர் மாநாட்டில்! 17-7-48 சனிக்கிழமையன்று!

தொல்காப்பியரோ, திருவள்ளுவரோ, இளங்கோ அடிகளோ அல்லது மாங்குடி மருதனாரோ என்று கற்றறிந்த தமிழரெல்லாம் வியந்துரைக்கத் தக்க பெரும் புலமை வாய்ந்த தமிழ்க் கடல் **மறைமலை அடிகளார்** முழுநீளக் காவி உடையுடன், முகத்திலே புன்னகை தவழ்ந்து விளையாட, வயது எண்பதுக்குமேல் ஆயிற்று என்றாலும் முகத்தில் வீசும் 'களை' மூப்பது ஆண்டுக் காளையினது என்று கூறத்தக்க வண்ணம் ஜொலிக்க, நடுவே வீற்றிருக்கிறார். அவர்தம் வலப்புறத்திலே, பெர்னாட்ஷா என்று சிலர் கூற, அல்ல—ரூசோ என்று வேறு சிலர் கூற—அல்ல அல்ல சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸ்தான் அவர் என்று வேறு சிலர் கூற, வால்டேர் வீசிய வெடிகுண்டுகள் போல்வதப்பா அவர் பேச்சும் எழுத்தும், ஆகவே அவர் வால்டேர்தான் — ஐயமில்லை என்று மற்றும் சிலர் கூற, இவ்வளவும் ஒவ்வோரளவுக்கே உண்மை, முழு உண்மை, இவ்வளவு பேருடைய சிறந்த பண்புகளையும் தீவிர வாதத்தையும் கூட்டி எடுத்து இறுத்துத் தெளிவித்தால் வருகிறதே ஓர் உருவம் அதுதான் அவர் என்று மற்றும் சிலர் கூற, தன் வெண்தாடியை அசைத்த வண்ணம் வீற்றிருக்கிறார் **பெரியார்**, அந்த வெண்தாடி அசைவினாலே, பலப்பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்திலே அசையாதிருந்த பல வைதீகக் கோட்டைகளை அசைத்துவிட்ட அரிய வெற்றிகளை தமிழருக்கு நினைப்பூட்டிய வண்ணம்! அடிகளாரின் இடப் புறத்திலோ, அமைதியின் சின்னமாய் அதே நேரத்தில் புரட்சியின் உருவமாய், இன்தமிழ்த் தென்றலாய் அதே சமயத்தில் சுழன்றடிக்கும் சூறாவளியாய், அடிகளாரின் அன்பராய் அதே நேரத்தில் பெரியாரின் பெரு நண்பராய் அமர்ந்திருக்கிறார், நம் முதுபெருந் தலைவர் **திரு. வி. க. அவர்கள்.**

அறிவுக் கடலும், புரட்சியின் சின்னமும், தமிழ்த் தென்றலும் ஒருங்கே, ஒருவர் பக்கம் ஒருவர், அமர்ந்துள்ள இந்த அழகிய காட்சியைக் கண்டு களித்தவண்ணம், **அறிஞர் அண்ணா** அவர்களும் **புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்** அவர்களும் ஒருபால் அமர்ந்திருக்க, இந்த சர்வ கட்சித் தமிழர் முன்னணியில் கதர் சட்டைக்கு மட்டும் என்ன விதிவிலக்கா—அது முடியாது என்று முழக்கமிட்ட வண்ணம் தமிழ் முரசு ஆசிரியர் **ம. பொ. சி.** அவர்களும் எழுத்தாளர் தலைவர் **நாரண துரைக் கண்ணனாரும்** வேறோர் பால் வீற்றிருக்க, "மதத்தால் நான் இஸ்லாமியன் என்றாலும் மொழியால் நான் தமிழன்தானே! தமிழுக்கு உற்ற ஆபத்தைக் களைந்தெறிய வேண்டியது தமிழனாகிய என் கடமை அல்லவா, இதோ வந்தேன் நானும், மொழிப் போரில் பெறுவேன் பங்கு, தவறேன் பணியாற்ற" என்று கூறிக் கொண்டே சட்டமன்ற உறுப்பினர் **அப்துல் மஜீத் எம், எல். ஏ** அவர்கள் பெரியாருடன் கை குலுக்க, "நீங்கள் முந்திக்கொண்டு விட்டீர்களே! நானல்லவா அவரிடம் கைகுலுக்க இருந்தேன் முதலில்! ஏசுநாதர் மொழி வழி நடப்பவன் நான். மெய்தான். அதனால் என்ன? மொழிப்போரில் எனக்குப் பங்கில்லாமல் போகுமா? தாய் மொழிக்குப் பணியாற்றுவதை வேண்டாம் என்றா உரைப்பார் எம் கர்த்தர்" என்று **ரெவரெண்டு அருள்தங்கையா** அவர்கள் அன்பர் அப்துல்மஜீதிடம் கூறிட, இஸ்லாமியரும் கிறித்தவரும் இவ்வண்ணம் போட்டி போட்டுக் கொண்டு அறப் போருக்கு முந்திடும் பண்பு கண்டு தமிழ்ப் பற்று மிகக் கொண்டு டாக்டர் கிருஷ்ணசாமி, திருவொற்றியூர் சண்முகம்

சர்வ கட்சி முன்னணி, இந்தியை ஒழிக்க!

விருதுநகர் வி. வி. ராமசாமி, சண்டே அப்சர்வர் பால சுப்ரமணியம், வி. பி. எல். மணியர் போன்றவர்கள் திரள்திரளாக வந்து அமர்ந்திருக்க, வீராங்கனைகள் நாங்கள் இருக்கிறோம் தமிழைக் காப்பாற்ற, நீங்கள் வந்தாலென்ன வராவிட்டாலென்ன என்று ஆடவரைப் பார்த்து 'கேலி' பேசிய வண்ணம் இந்திராணி பாலசுப்பிரமணியம், டாக்டர் தருமாம்பாள், மூவலூர் இராமாமிர்தத்தம்மாள், வ. பா தாமரைக் கண்ணியார், போன்ற மாதரார் ஓர் புறம் வீற்றிருக்க, தமிழர் தலைவர்கள் சாதி மதம் கட்சி எனும் குறுக்குச் சுவர்களை இடித்தெறிந்து விட்டு தமிழ் எனும் வெட்ட வெளியில் தத்தம் வேறுபாடுகள் அத்தனையையும் மறந்துவிட்டு ஒன்றுகூடி நிற்கும் இந்த அரிய காட்சியின் மாட்சியை மயிலாப்பூரும் மாம்பலமும் காண வேண்டும், கண்டு கலங்கவேண்டும், கலங்கி நடுங்கவேண்டும், கண்டால் போதும்—கலங்கி நடுங்குவர்—நிச்சயம் என்று எண்ணமிட்ட வண்ணம் திராவிடர் கழக இளந்தலைவர்களும் தளபதிகளும் பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் அணி அணியாக அந்த மேடையைச் சூழ்ந்திருக்க, "இது மேடையா இது! அல்ல! அல்ல! தமிழகம்! நம் நாடு! நம் தாயகம்! இங்கே ஒவ்வொரு பகுதித் தமிழரும் இருக்கின்றனர்; யார் இல்லை, எந்தத் தலைவர்கள் இல்லை, இது அல்ல தமிழகம் என்று யார் கூற முடியும்?" என்று செயின்ட் மேரி மண்டபம் முழுதும் சமாளிக்க முடியாத அளவுக்கு நிரம்பி வழிந்த பெருங் கூட்டம் வியந்து வியந்து கூற, இவர்கள் கூறுவதைக் கேட்டு அடடா! சர்வ கட்சித் தலைவர்களும் ஒன்று திரண்டுள்ள அரிய காட்சியை நேரில் காண முடியாது போய்விட்டதே என்று மண்டபத்தின் நாலுபுறமும், சர்ச் பகுதிகளிலும், வெளியே தெருவிலும், தூரத்தில் 'ஐகோர்ட்' கட்டிடம் வரையிலும் எள் விழ இடமின்றி கடலெனத் திரண்டிருந்த தமிழர் எலாம் வருந்த வருந்த, மாநாடு பகல் 2 மணிக்குத் தொடங்கிற்று.

"நகரிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் ஏராளமான கூட்டம் வந்திருந்தது" — **சுதேசமித்திரன்.**

"ஏராளமான மக்கள் மாநாட்டுக்கு வந்திருந்தார்கள்" — **தினத்தந்தி.**

"ஏகப்பட்டபேர்"—**பாரததேவி.**

"மிகப் பெருங்கூட்டம்: பல்வேறு அரசியல் கருத்துடையவர்களும் ஒன்று கூடி இருந்தனர்."—**ஹிந்து.**

"மண்டபம் அதன் முழு அளவுக்கும் நிரம்பிவிட்டது. மண்டபத்தைச் சுற்றிலும் திரளான கூட்டம். அரண்மனைக்காரன் தெருவில் வண்டிப் போக்குவரத்தே நின்றுவிட்டது."—**மதராஸ் மெயில்.**

கூட்டத்தின் அளவைப்பற்றி ஆரிய ஏடுகள் குறித்துள்ள வாசகங்கள் இவை. தமிழர் இயக்கம் என்றாலே அதனை மறைத்துத்தான் தீர்வது என்று முடிவுகட்டிக் கொண்டுவிட்ட இந்த ஏடுகளின் இருட்டடிப்பையும் மீறிக்கொண்டு ஒளிவீசியிருக்கிறது சென்னை மாகாண இந்தி எதிர்ப்பாளர் மாநாடு எனில் அங்குத் திரண்டு வந்த தமிழர் கூட்டத்தின் தொகையைப்பற்றி நாம் குறிப்பிடத் தேவையில்லை.

கருத்த மேனியும், கள்ளங் கபடமற்ற தமிழுள்ளமும், நல்ல தமிழ்ப் பற்றும், அரிய கலைத்திறமும் படைத்த **நண்பர் நாரண துரைக்கண்ணனார்**—அண்மையில் நாகர் கோயிலில் கூடிய தமிழ் எழுத்தாளர்களால் ஏகமனதாகத் தம் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்புடைய தமிழறிஞர்—"பிரசண்ட விகடன்" ஆசிரியர், முதற்கண் எழுந்து நின்று, மாநாட்டுக்கு வந்தார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பேசினாரா, இல்லை, போர் முரசு கொட்டினார். தொடங்கும் போதே கூறினார், தமிழ் நாட்டில், தமிழ் வளர்ச்சிக்காக, இரண்டாவது முறையாகப் போர் தொடுக்கவே; அந்தப் போருக்கான படை திரட்டவே, அந்தப் படையைத் திறம்பட நடத்துதற்கான வழி வகுக்கவே நாம் இங்குக் கூடியுள்ளோம் என்று! அவர் மூட்டிய வீரக் கனலிலே பட்டுத் தெறித்தது தமிழர் உள்ளம். அங்கும் தீ! தீ! 'போர்க்களத் தீ! தீ' எழுந்தது, வளர்ந்தது, சுழன்றது, சுழன்று கொண்டிருக்கும் போதே **அடிகளார்** எழுந்தார், தம் இனிமையில் குரலால், தமிழினும் இனிய முறையில், தமிழ் வாழ்க என மொழிந்தார், கட்டுக் கடங்காது பெருகி விட்ட அந்த மாபெரும் மக்கட் கூட்டலோசையின் நடுவே அடிகளாரின் மெல்லிய குரலோசை கேட்கவில்லை எனவே அவர் குறைவாகத்தான் பேசினார் என்றாலும் செந்தமிழைக் காப்பதற்கு அறப்போர் தொடுக்க வேண்டியது மிக மிக அவசியம் என்பதை அழகு தமிழில் இசைபட நவின்றார். அவர் எழுந்தபோதும் அமர்ந்தபோதும் நம் கலைக் கடல் வாழ்க எனும் பெரு முழக்கம் மண்டபம் அதிர எழுந்தது. "முன்பு, மொழிப் போர் நடந்தபோது, அடிகளார் ஆசி கூறி, அறிவுரை கூறி, அன்புடன் வாழ்த்துரை கூறி அதனைத் துவக்கி வைத்தார். அன்றைய போராட்டம் வெற்றியில் முடிந்தது. இன்றும் அடிகளார் போராட்டத்தைத் துவக்கி வைக்கிறார். நிச்சயம் இது வெற்றியில் முடியும்" என்று பெரியார் அடிகளாரை முன் மொழிந்த போதே குறிப்பிட்டது முற்றிலும் உண்மையே என்பது அடிகளார் ஆற்றிய முன்னுரையையும் முடிவுரையையும் கேட்ட பிறகு தெற்றெனப் புலனாயிற்று.

"என்றும் தமிழ்த் தொண்டாற்றிவரும் நம் அன்பர் திரு. வி. க. இதுபோது திறப்பு விழா விரிவுரை ஆற்றுவார்" என்று அடிகளார் தனித்தமிழில் கூறி முடித்ததும்; "தமிழிலே பிறந்து, தமிழிலே வளர்ந்து, தமிழிலே நினைந்து, தமிழிலே எழுதி, தமிழிலேயே பேசி, தமிழையே வளர்த்து, தமிழாகவே வளர்ந்து வரும் எனது குருநாதர் மறைமலை அடிகளாருக்கு எனது வணக்கம் உரியதாக, ஆக." என்று அறிஞர் திரு. வி. க. தம் அன்புரையைத் தூய தமிழில் தொடங்கியதும் கூடி இருந்த மக்கள் உள்ளத்தை மிகவும் உருக்கிவிட்டது. இந்தக் காட்சி தற்காலக் காட்சியாகவோ, செயின்ட்மேரி மண்டபக் காட்சியாகவோ, இந்தி எதிர்ப்

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

24—7—48 சனிக்கிழமை

களம் புகு காதை!

பாசறைக் கூட்டம் நடந்து முடிந்துவிட்டது. அறப்போர் தொடுத்தே தீர்வது என்ற வீர முடிவுக்கு படைத் தலைவர்கள் வந்தாகிவிட்டது. போர் முரசும் கொட்டியாகிவிட்டது. போர்ப்பாட்டும் இசைத்தாகி விட்டது. போர்வாளும் தயாரித்தாகி விட்டது. படைக் கலங்களும் அணி அணியாகக் குவித்தாகி விட்டன. மலை குலையினும் மனங்குலையாத மாவீரம் படைத்த மறவர் பெருமக்கள் பச்சைரத்தம் பரிமாறியேனும் பைந்தமிழுக்கு வந்த பேரிடியை ஒழித்தன்றி ஓயமாட்டோம் என்று உறுதிச் சொல் உரைத்தாகி விட்டது. தமிழகத்தின் ஆன்றோரும் சான்றோரும் "தமிழன் தொடுக்கும் அறப்போர் வெல்க வெல்க" என்று ஆசி மொழி கூறி தங்கள் இதய பூர்வமான வாழ்த்துதலைத் தந்தாகி விட்டது. மாகாண இந்திப் போர்த் தலைமை வாரியமும் (The Anti Hindi High—Command) அமைத்தாகி விட்டது. களம் அமைய வேண்டிய இடம், போர் தொடங்கவேண்டிய நேரம், தாக்குதல் இருக்கவேண்டிய முறை, முதலில் கையாள வேண்டிய போர்க்கருவிகள், எவரெவர் எந்தெந்த படைவரிசையில் நிற்பது என்ற திட்டம், யார் யார் களப்பலி (முதல் பலி) யாவது என்கின்ற ஏற்பாடு முதலியவற்றை நிர்ணயிக்கும் பொறுப்பை அவர்களிடம் தந்தாகி விட்டது. தொடுத்த போர் ஒவ்வொன்றிலும் வெற்றியன்றி வேறு மாற்றம் ஏதும் காணாத அந்த அஞ்சாத நெஞ்சு படைத்த அடலேறு பெரியார் இராமசாமியின் தலைமையில் தளராத நம்பிக்கையுடன், வெற்றி நிச்சயம் என்ற உறுதியுடன், அந்த வெற்றிக்காக எந்த விலையும் கொடுத்தே தீர்வது என்ற திடசித்தத்துடன் சர்வ கட்சித் தமிழர்களும் அந்த சேரன் செங்குட்டுவன் பக்கம் வந்து அணிவகுத்து நின்றாகிவிட்டது. போர் வீரர்கள் அத்தனை பேரும் தம் வலதுகாலை முன் வைத்துக் கொண்டு புறப்படு என்ற உத்திரவு எந்த விநாடியில் பிறக்கும் என்பதைத்தான் கட்டுக்கு மீறிய ஆவல் தெறிக்கத் தெறிக்க, துடி துடிக்கும் உள்ளத்தோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அதோ, அதோ, தலைமை வாரிய உறுப்பினர்களும் நம் தலைவர் பிரானும் பாசறையை விட்டு போர்க் களம் நோக்கி மடமடவென நடந்து செல்லத் தொடங்கி விட்டனர். அவர்கள் களம் வந்து சேர வேண்டியது தான் தாமதம், வந்து சேர வேண்டியதுதான் என்பதென்ன, அதோ களம் இருக்குமிடத்திற்கு மிக அருகிலேயே வந்து விட்டார்கள், தீர்ந்தது தீர்ந்தது, இன்னும் இரண்டொரு விநாடிகள் தான், களமது சேர்ந்து விடுவர், போர்க் கொடி உயர்த்திவிடுவர், போர் தொடங்கிவிடும்.

தமிழன் போர் தொடுக்கிறான் எனில் அது சாமானியமானதாக இருக்க முடியாது. தமிழன் என்றாலே பிறவிப் போர் வீரன் என்று பொருள். பிறவிப் போர் வீரர்கள் தொடுக்கும் போர் எப்படி சாமானியமானதாக இருக்கமுடியும்?

அவினாசியார் தமிழர்களை அறப்போருக்குக் கூவி அழைக்கிறார். அந்த அறைகூவலை ஏற்றுக் கொண்டு விட்டனர் தமிழர், போர்க்கோலம் பூண்டு விட்டனர், களம் புகு காதை தொடங்கி விட்டனர், மாற்றானுக்கு—அவன் மொழிக்கு எங்கள் நாடு ஒப்பாது ஒப்பாது என்று இடிமுழக்கம் புரியத் தொடங்கி விட்டனர், இந்திதானே—வரட்டுமே—வந்தால் என்ன—அதன் இடுப்பை முறிக்க எண்ணற்ற தமிழர் யாம் இருக்கும்போது அது இங்கென்ன செயயும் என்று 'துந்துபி' கீதம் இசைக்கத் தொடங்கி விட்டனர், ஒழிக—ஒழிக—அந்தப் பொல்லாத கட்டாய இந்தி அடியோடு ஒழிக என்று வல்லோசை கிளப்பத் தொடங்கி விட்டனர், செல்வோம் போர்க்களம்—தொடுப்போம் மொழிப் போர்—வீழ்த்துவோம் இந்தியை—சூடுவோம் வாகை—வாரீர் தோழர்களே என்று உற்சாக உரைபல புகலத் தொடங்கி விட்டனர், தலைவர் ஆணையை, போர் தொடங்கும் விநாடியை எதிர்பார்த்த வண்ணம் இன்னுமா தாமதம், இன்னுமா தாமதம், ஏன் தொடங்கவில்லை போர், இனியும் தாமதிப்பது ஏதுக்கு, இனி ஒரு விநாடியும் எங்களால் பொறுக்க முடியாது என்றெல்லாம் ஆவேசச் சொற்களை வீசத் தொடங்கி விட்டனர், போர்! போர்! அதுவன்றி வேறு பேச்சில்லை அவர்களிடம்! தமிழ்! தமிழ்! அதுவன்றி வேறு முழக்கம் எழவில்லை அத்தமிழ் மறவர் கூட்டத்திலிருந்து. அன்பர் அவினாசியார் இந்தியை நுழைத்து தமிழுக்கு அவமானம்

தேடிய இச்செயல் மூலம் தமிழர் குலத்திற்கே நேர்ந்த மாசினை எங்கள் இரத்தத்தைக் கொண்டேனும் கழுவிடுவோம் என்றுரைக்கும் சொல் தவிர வேறு சொல் எழவில்லை அவர்கள் பாலிருந்து! அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நடமாடும் புறநானூறாக, ஒவ்வொரு கலிங்கத்துப் பரணியாகக் காட்சி தருகின்றனர். "அடக்கு முறை பாணங்களை வீசுவரா சர்க்கார், வீசட்டுமே, அவை எம் உடலைத்தானே தாக்கும், உள்ளம்! அதை யார் என்ன செய்ய முடியும்" என்று கேட்கின்றனர், 144 தானே! அது எமக்குத் துரும்பு என்கின்றனர், சிறைக் கம்பிகளைக் காட்டி எங்களை மிரட்டும் எண்ணமா ஆளவந்தார்கட்கு, அந்தக் கம்பிகளைக் காட்டிலும் வலிவுடையது எங்கள் தமிழ் என்று பொன்மொழி பேசுகின்றனர், பாதுகாப்புச் சட்டம் எனும் நச்சரவத்தை ஏவுவர் எம்மீது என்றுதானே கூறுகின்றீர்கள், அந்த நச்சரவத்தைக் கூறு கூறாக்கி விடும் எங்கள் கரத்திலே உள்ள மக்கள் பலம் எனும் வாள் என்று சிரித்த முகத்துடனே கூறுகின்றனர் அந்தச் சிங்க ஏறனையார். சட்டம் எனும் முள்வேலி சர்க்கார் மாளிகையைச் சுற்றி எழுமானால் அந்த முள்வேலியைத் தாண்டிக் குதித்துப் போராடவும் வழி தெரியும் எங்கட்கு என்று இறுமாந்து கூறுகின்றனர். பெரியாரைச் சிறை பிடித்தாலோ.... என்று கேட்டால் நாடெங்கும் பெரியார்கள் தோன்றுவர் என்கின்றனர். 'விடுதலை'யை அடக்கிவிட்டால்....ஆயிரம் 'விடுதலை'கள் தோன்றும் என்கின்றனர், தலைவர்கள் எல்லோரும் ஏக காலத்தில் பிடிபட்டால்....ஒவ்வொருவரும் தலைவராவோம் என்கின்றனர், பத்திரிகைகளே இல்லாவிட்டால்...வாய் உண்டு பேச என்கின்றனர், அதற்கும் பூட்டிடப் பட்டால்....கரம் உண்டு வழி காட்ட என்கின்றனர், தடியடி தலையைத் துளைக்குமே என்று கேட்டால் திருப்பூர் குமரன்களல்லவா நாங்கள் என்று மறுமொழி கூறுகின்றனர், ஜன்ம தண்டனைகள் தரப்படுமே என் செய்வீர் என்றால் வீர சிதம்பரனார் பரம்பரைதானே நாங்கள் என்று பேசுகின்றனர், தூக்குமேடை உங்களைக் கூவி அழைக்குமே என்று சொன்னால் **ஊமைத்துரை கட்டபொம்மு** எனும் வீர சகோதரர்களைத் தந்த இனம் எங்கள் இனம் என்று மார் தட்டிப் பேசுகின்றனர், அப்பப்பா! மலபார் போலீசும் பாஞ்சாலப் படையும் தயாரில் இருக்கின்றனவாமே உம்மீது ஏவிவிடப்பட என்று குறிப்பிட்டால் **பாஞ்சாலங் குறிச்சி** மண்ணுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவில்லை—தெரியாதோ சர்க்காருக்கு என்று பெருமிதத்துடன் கூறுகின்றனர், தாளமுத்து நடராசன் கதி தெரியாதோ என்று வினவினால் அதுமட்டுமா தெரியும், வேலாயுதம் கதியும் தெரியும், உத்தமர் காந்தியார் கதிகூடத் தெரியும், அத்தனைக்கும் தயார், தமிழ் வாழ்ந்தால் போதும் என்கின்றனர். மரணம் உங்களைத் துப்பாக்கி முனையில் சந்திக்குமே என்றால் நாங்கள் என்ன "என்றும் சிரஞ்சீவி"களா என்று கேட்கின்றனர், அடடாவோ அடடா, அவர்கள் சொல்லெல்லாம், சொல்லில் தவழும் நினைப்பெல்லாம், வீரம்! வீரம்! தமிழ் எனில் எம் உயிர்ப் பொருளாம்—நம் தமிழ் இலை எனில் இத்தமிழ் நாடெங்கும் இருளாம் என்றும், பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிசமென்று சங்கே நீ முழங்கு என்றும், தூரிகையும் எழுதுகோலும் தூய்தமிழர் நாவும்—மிகு தூய் தமிழர் நாவும், தொட்டியற்றும் அச்சுச்சாலை மற்றுமுள்ள யாவும் ஓரிடத்தும் தொடுவதுண்டோ இந்தியிலோர் எழுத்தை—அந்த இந்தியிலோர் எழுத்தை என்றுமெல்லாம் அவர்கள் ஆவேசத்துடன் மொழிவதைக் கேட்டால் கல்லும் கனன்றெழும், தரை மண்ணும் குதித்தெழும் கட்டாய இந்தியை வீழ்த்த.

ஆனால் அவினாசியார், இந்தி வைத்தது வைத்ததே, எதுவரினும் சரியே, அதை எடுப்பது நடவாது—முடியாது என்று கூறிவிட்டாராம், சென்ற கிழமை நடைபெற்ற சென்னை மாகாண இந்தி எதிர்ப்பாளர் மாநாட்டுக்குப் பிறகும்கூட. ஆகவே தமிழருக்கு, தமிழை மீட்க, தமிழர் கலாசாரத்தைக் காப்பாற்ற, வடவர் படையெடுப்பினின்று தமிழ் மொழிக்கும் நாகரிகத்துக்கும் பாதுகாப்புத் தர அறப்போர் தொடுப்பது தவிர வேறு வழி இல்லை.

பெரியார் அவர்கள் இந்தி எதிர்ப்பாளர் மாநாட்டில் கூறியிருப்பதுபோல, இது மொழிப் போராட்டம் மட்டுமல்ல—கலைப் போராட்டம்; கலாச்சாரப் போராட்டம்; மானாபிமானப் போராட்டம்; உரிமை வேட்கைப் போராட்டமும் ஆகும். ஆம்! தமிழகத்தின் வரலாற்றிலேயே இதுவரை காணப்பட முடியாத மகத்தானதோர் போராட்டம் இது. இதில் நாம் பெறுகின்ற வெற்றி அல்லது தோல்வியைப் பொறுத்துத்தான் எதிர் காலத் திராவிடத்தின் வாழ்வும் வரலாறும் அமையும். இதில் நாம் தோற்றுவிட்டால் இன்னும் இருநூற்றாண்டு காலத்திற்கு தமிழகம் தலை நிமிரவே முடியாத படுபாதாள நிலைக்கு வீழ்ந்துவிடும் என்பது உறுதி; உறுதி! "பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இடைபெறாது நடந்து வரும் திராவிடர்—ஆரியர் போராட்டம் இன்று ஒரு முடிவான கட்டத்துக்கு வந்து விட்டது.

(11-ம் பக்கம் பார்க்க)

திரு. வி. க. வின் போர்முரசு: ம. பொ. சி. தீரவுரை!

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

மியக்க நிகழ்ச்சியாகவோ தோன்றவில்லை. பழம் சங்க காலத்தில், சங்கத்துச் சான்றோர் ஒருவரை ஒருவர் காணும்போது அன்பு நனி தவழ, ஆர்வம் மீதூர, ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி கண்ணீர் கசிந்து தம் நட்புரிமையை எடுத்துச் சொல்லி மகிழ்ச்சிக் கடலில் நீந்தித் திளைப்பர் என சங்க இலக்கியங்களிற் சிற்சில இடங்களில் சொல்லோவியங்கள் வருகின்றனவே அவற்றில் ஒன்றினை வெட்டி எடுத்து 1948ல் சென்னையில் செயின்ட்மேரி மண்டபத்தில் கூடும் இந்தி எதிர்ப்பு மாநாட்டுடன் ஒட்டிவிட்டனரோ என்றெண்ணும்படி இருந்தது.

"எடுத்த காரியத்தைத் திறம்பட நடத்த நமக்கு முதற்கண் வேண்டுவது அமைதி அமைதி அமைதியேயாகும். நீங்கள் அமைதியாக இருந்தால் தான் என்போன்றார் சொற்களைச் செவ்வனே செவிமடுத்தல் கூடும். யானோ கிழவன்; வயதானவன். சென்ற இருபது நாட்களாகப் படுக்கையிலேயே கிடந்தவன் இன்றுதான் இம்மாநாடு காரணமாக வெளியே வந்தவன். ஆகவே நீங்கள் யாவிரும் ஒருமைப்பாட்டோடு செவிமடுத்துக் கேட்டால்தான் யான் உரைக்கும் சொற்களைக் கேட்டல் இயலும்" என்று திரு விக தன் பேச்சை, சங்கத் தமிழிலேயே, தூய நடையிலேயே, பண்பட்ட இனிய மொழியிலேயே தொடர்ந்து நிகழ்த்தத் தொடங்கியதும், நாம் இருப்பது சங்ககாலமோ என்ற ஐயம் அனைவர்க்கும் ஏற்படலாயிற்று. அன்னார் பேச்சு தொடர்ந்து நிகழ நிகழ அந்த ஐயமும் தொடர்ந்து வரலாயிற்று. ஆனால் திரு.வி.க. அவர்கள், "அரசியலார் என்ன செய்கின்றனர்? சட்டங்கள் செய்கின்றனர். என்ன சட்டங்கள்? பாதுகாப்புச் சட்டங்கள், அவற்றைப் பாதுகாக்க மற்றும் சில அடக்குமுறைச் சட்டங்கள், விசாரணையின்றிக் காவலில் வைத்தற்கான வேறு சில சட்டங்கள், இன்னோரன்ன சட்டங்கள் தாம் இன்றைய சுயராஜ்ய சர்க்கார் அன்றுடம் பிறப்பித்துவரும் சட்டங்களாகும்" என்று கூறிவிட்டு இவை ஆக்க வேலையின் அறிகுறிகளா, அல்லது அழிவுவேலையின் அறிகுறிகளா நீங்களே கூறுங்கள்" என்று மாநாட்டாரை நோக்கிக் கேட்டுவிட்டு, அந்த அழிவுவேலையின் ஒரு பகுதியே இந்த கட்டாய இந்தி என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும்" என்று முடித்தபோதுதான் நாம் இருப்பது சங்க காலமல்ல அவினாசியார் காலம் என்பது மக்கள் நினைவிற்கு வந்தது!

இந்தி கூடாது என்பதற்கான ஆணித்திறமான வாதங்களை அடுக்கடுக்காக எடுத்துக் கூறிவிட்டு **இந்தி** என்று சொல்லி நிறுத்தினார். திரு. வி. க. உடனே **ஒழிக** என்ற வல்லோசை வானைக் கிழித்துக் கொண்டெழுந்தது, மக்கள் மன்றத்தில்ருந்து! தமிழ் என்றார், வாழ்க என்ற பெரு முழக்கம் எழுந்தது. இந்த இரு முழக்கங்களும் எழுந்தபோது அந்த மண்டபம் அதிர்ந்தது; மண்டபத்தைத் தாங்கியிருந்த மண் அதிர்ந்தது; மீதிருந்த வான்வெளி அதிர்ந்தது; திரண்டிருந்த மக்கள் உளம் அதிர்ந்தது; அவினாசியாரின் "திடீர்கோப" இதயமும் அதிர்ந்திருக்கும் சி. ஐ. டி.க்கள் தந்த குறிப்புக்களிலிருந்து இந்தப் பேரொலியின் பேராற்றலை அவர் உணர்ந்தபோது! ஆம்! ஓமந்தூராரின் அதிராத உள்ளமும் அதிர்ந்திருக்கும் அடலேறுகளின் இந்த இடியோசை கேட்டு!

திரு. வி. க. வின் தேன் தமிழில் சொக்கிய இசைவண்டுகளென தமிழர் இருந்தபோது தன் வளைவு மீசையை முறுக்கிய வண்ணம், நண்பர் **ம. பொ. சிவஞானம்** எழுந்து, உரத்த குரலில், ஆரியம் நடுங்கும் வகையில், உயிர்ப்பாற்றல் மிக்கதோர் வீர உரையாற்றினார். கதர் சட்டை சிவஞானம் எப்படி கருஞ்சட்டைக்காரர்களுடன் கூடலாம் என்று கேட்கும் கருத்தற்ற கபோதிகளுக்குத் தக்க கசையடி தந்தார், கட்சி வேற்றுமை காரணமாக கன்னித் தமிழைக் காக்க மறவாத தோழர் சிவஞானம். "கருஞ்சட்டைக்காரர்கள் இந்தியை எதிர்க்கிறார்கள் என்றால் நாம் எதிர்க்கக் கூடாது என்று பொருளா? அப்படியானால் என் அருமைத் தேசியத் தோழர்களே, கருஞ்சட்டைக்காரர்களுக்கே தமிழை தாரை வார்த்துக் கொடுத்துவிடப்போகிறீர்களா" என்று **தோழர் சிவஞானம்** கேட்ட கேள்வி போலித் தேசிய வாதிகளின் பொத்தல் உள்ளத்தை உலுக்கியே இருக்கும்.

"ஓமந்தூரார் ஆட்சியை ஒழிக்க வேண்டும் என்ற கருத்தோ, அவினாசியார் ஆட்சியை அழிக்க வேண்டும் என்ற எண்ணமோ காமராஜ் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்ற நினைப்போ, நமக்குக் கிடையாது. பெரியாருக்கும் கிடையாது நாம் தொடுத்துள்ள வழக்கில் அவினாசியாரும் ஓமந்தூராரும் குற்றவாளிக் கூண்டில் ஆஜராகியிருந்த போதிலும் உண்மைக் குற்றவாளிகள் இவர்கள் அல்லர். இவர்கள் வாதிகளாக இருந்திருக்க வேண்டியவர்கள். தவறினால் நமக்கு சாட்சிகளாகவாவது இருந்திருக்க வேண்டியவர்கள். ஆனால் அவசரப்பட்டு குற்றவாளிக் கூண்டில் ஏறிவிட்டார்கள். என்றாலும் இவர்கள் நம்மவர்களே. உண்மை எதிரிகள் இவர்கள் அல்ல. உண்மைக் குற்றவாளிகள் சென்னையிலும் இல்லை. அவர்கள் வேங்கடத்துக்கு அப்பால், விந்தியத்துக்கும அப்பால், டில்லியில் இருக்கின்றனர்" என்று மிகத் தெளிவாகக் கூறினார் தோழர் சிவஞானம்.

"இன்று நண்பர் அவினாசியாருக்கும் ஏனைய தமிழ் அமைச்சர்களுக்கும் அவர்கள் புகுந்திருக்கும் ஒரு நல்ல பாதுகாப்பான மதிலைக் கட்டிக் கொடுத்தவர் நம் பெரியார் தான். ஆனால் இன்று அவர் கட்டிய மதில் சற்று உயரமாகி விட்டது, அதற்கு உட்புறத்தில் என்ன நடக்கிறது என்று நம்மால் அறியக்கூடவில்லை. ஆகவே நாம் பார்த்தால் உள் நடப்பது தெரியும் அளவுக்கு அந்த மதிலை இடித்துத் தகர்த்தெறிய வேண்டும்" என்று "தமிழ் முரசு" ஆசிரியர் கொட்டிய ஓசை அடங்குவதற்குள்ளாக **புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்** அவருக்கு இயல்பான அந்தக் கம்பீரத் தோற்

பொறுத்தது போதும்! போர் தொடுப்போம் இனி!

றத்துடன் சிங்க ஏறுபோல் நடந்து வந்து...... பேசவில்லை......... அறிவுரை கூறினார் அவினாசியாருக்கு! "அமைச்சரே, உமக்கு உள்ளூர இந்தி பிடிக்கவில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. பிறகு ஏன் இந்த வீண் ஜம்பம், வறட்டுப் பிடிவாதம் எல்லாம்? இந்தியைப் புகுத்தா விட்டால் டில்லி தர்பார் உம்மை வெளியேற்றிவிடும் என்ற அச்சமா? அப்படியானால் அவர்களுக்கு அஞ்சி வாழும் இந்த அடிமை வாழ்வும் ஒரு வாழ்வா? மந்திரி பதவியை உதறி எறிந்துவிட்டு வெளியே வாரும் நாலரை கோடி தமிழர் உண்டு உம்மைப் போற்ற" என்று கொஞ்சம் கோபமாகவே கூறினார் கவியரசர், அது இயற்கைதானே! நாடாள வந்தவர்கள் கோணல் வழி புகும் போது அவர்களை நேர் வழியில் நிறுத்தும் உரிமை சங்க காலத்திலிருந்தே தமிழ்ப் பெருங் கவிஞர்கட்கு உள்ள பரம்பரை பாத்தியதை தானே!

கவிஞருக்குப் பிறகு அண்ணா! அண்ணா அவர்கள் அழகுபடச் சொன்னார், அவினாசியாருக்குப் புரியக்கூடிய ஒரே ஒரு மொழி போர் போர் அறப்போர் என்பது தவிர வேறில்லை என்று.

அன்று அண்ணா அவர்கள் ஆற்றிய வீரவுரை வெறும் வீரவுரை மட்டுமே அல்ல, அறப்போர் தொடுக்கப்பட்டுவிட்டது, என்பதற்கான முரசு முழக்கம். முரசு முழக்கம் மட்டுமே அல்ல, அவருடைய இருதய கீதம். அவருடைய இருதய கீதம் மட்டும்தானா, அல்ல அல்ல ஆயிரமாயிரம் இளைஞர்களின் உள்ளத்திலே நின்று நர்த்தனமாடும் எண்ணங்களின் எழில் மிகு நாதம். அண்ணா அவர்கள் தென்னாட்டு இளைஞர்களின் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டிவிட்டார் அந்த அரை மணி நேர அழகுரை மூலம். அன்று அவருடைய சொற்பொழிவில் சொல்லுக்குச் சொல் புரட்சிப் பொறி பறந்தது என்பது வெறும் வார்த்தைக்காகக் கூறும் வாசகம்அல்ல எழுத்துக்கெழுத்து உண்மை. அந்த அனல் கக்கும் ஆவேச உரையை சுருக்கிக் கொண்டே வந்து ஒரே வாக்கியத்தில் எழுதினால் அந்த வாக்கியம் இதுவாகத்தான் இருக்கும்; **"பொறுத்தது போதும். போர் தொடுப்போம் இனி."**

"நான் சொல்கிறேன், தமிழர் தம் மார்பு வெறும் எலும்புக்கூடாகத்தான் இருக்கிறது. ஆனால் சர்க்காரின் அடக்குமுறை ஈட்டி அந்த மார்புமீது பாயுமானால் அந்த ஈட்டியின் கூர் மழுங்குமே தவிர தமிழன் மார்பு சிதையாது." என்றும், "நம் போலீசாருக்கோ அதிக சக்தி இல்லை நம்மை அடிக்க, ஆகவே இரண்டடிதான் அடிக்க முடியும். நம் உடலிலும் அதிக வலுவில்லை தாங்க, இரண்டடிதான் தாங்க முடியும். ஆகவே அடக்குமுறை என்பது இந்த இரண்டும் இரண்டும் நாலு என்ற கணக்காகத்தான் இருக்க முடியுமே தவிர வேறில்லை ஆகவே நாம் இந்த அடக்குமுறை கண்டு அஞ்ச வேண்டுவதில்லை" என்றும், "நாம் ஒன்றும் கம்யூனிஸ்டுகளைப் போல இரகசிய தஸ்தாவேஜிகள் வைத்திருக்கவில்லை, நாட்டுப் புறங்களிலிருந்து நாசவேலைகளைச் செய்யப் போவதுமில்லை, சர்க்கார் அலுவலகத்திலேயே இரகசிய ஆட்களை வைத்திருக்கவுமில்லை, நாம் பகிரங்கமாக அறப்போர்தொடுக்கிறோம், செந்தமிழைக் காப்பதற்காகப் போர் தொடுக்கிறோம், சர்க்காருக்கு முன் கூட்டியே எச்சரிக்கை தந்துவிட்டு போர் தொடுக்கிறோம். இது அறப்போர், மொழிப் போர், கலாச்சாரப் போர் இதிலே ஒளிவு மறைவு கிடையாது" என்றும் சொல்லிக் கொண்டே வந்து, இறுதியில் "நம் புரட்சிக்கவிஞர் புகன்றதுபோல நமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை மாங்குயில் கூவிடும் ஓர்பூஞ்சோலை, அச்சோலைக்குச் செல்ல மயில் போன்றோரே வாருங்கள், குயில் போன்றோரே வாருங்கள், தமிழ்க் காளைகளே வாருங்கள், முடியுடைவேந்தர் பரம்பரையினரே வாருங்கள், திராவிடப் பெருமக்களே வாருங்கள், அறிவு புகட்டுவோம் அடக்கு முறை எனும் அழிவுப் பாதை வழி செல்லும் சர்க்காருக்கு" என்று முடித்ததும், மக்கள், வருவோம் வருவோம் என்று ஆர்ப்பரிக்கலாயினர். என்னைப் பொறுத்த வரை நான் இப்போதே சிறை புகுந்திடத் தயாராய் இருக்கிறேன். தலைவர் பெரியார் அவர்கள் ஒப்புக்கொண்டால் முதல் வரிசையிலேயே சென்று விடவேண்டும் என்பதே என்னுடைய ஆசை" என்று கூறி அண்ணா அவர்கள் தன் பேச்சை முடித்தார்.

"அண்ணாதுரை அவர்கள் கூறியதுபோல ஒவ்வொருவரும் களம் புகுவதற்கும் சிறை புகுவதற்கும், தன்னைத்தான் தயார் செய்து கொண்டு முன்னணி வரிசைக்கு வந்துவிட வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். போர், இந்த முறை மிகக் கடுமையானதாகவே இருக்கும். ஊர்வலத்தில் கண்ணீர்ப் புகை வீசுவார்கள், தொண்டர்களைத் தேடித் தேடித் தடியால் அடிப்பார்கள், மார்பை நேரே பார்த்துப் பார்த்துத் துப்பாக்கியால் சுடுவார்கள், சிறையில் இட்டு நம்மைச் சித்திரவதை செய்வார்கள், அத்தனை அக்கினிப் பரீட்சைகளுக்கும் நாம் பொதுக் கூட்டத்தில் ரோஜா மாலைகளை ஏற்க கழுத்தைக் கொடுப்பது போல, தயாராய் இருக்க வேண்டியதுதானே தவிர வேறில்லை." என்று பெரியார் அவர்கள் இறுதியில் ஆற்றிய அந்த அறவுரையில் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்

அறிவிப்பு

இதனால் பொதுமக்களுக்கு சென்னை இராயபுரம், கெம்பர் 12, மன்னார்சாமி கோவில் தெருவில் வார்ப்பட வேலை கம்பெனி வைத்திருக்கும் T. ராஜு நாயகர் தெரிவிப்பது என்னவென்றால், என் தம்பி T. லக்ஷ்மணன் என்னுடன் இருந்துவந்தார். இப்போது என்னிடம் இருந்து பிரிந்து தனியாகக் கம்பெனி வைத்து நடத்திவருகிறார். இதனால் இவருக்கு யாராவது கடன் கொடுத்தாலும் வேறு எதற்காகிலும் பணம் கொடுத்தாலும் என்னைக் கட்டுப்படுத்தாது என்பதைத் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
டி. இராஜு நாயக்கர்.
18—7—48

புகுவோம்! புகுவோம்! போர்க்களம் புகுவோம்!

டார். பெரியார் பேருரை, செவிமடுத்த அத்தனை பேரையும் போர்முனை சிப்பாய்களாக மாற்றி அமைத்து மறுகோலம் செய்துவிட்டது. அவர் பேசத் தொடங்கியபோது மெதுவாகவும் சாந்தமாகவும்தான் பேசத் தொடங்கினர். ஆனால் நேரம் ஆக ஆக சொற்களின் வேகமும் உணர்ச்சியின் ஆழமும் அதிகரித்துக்கொண்டே வந்து அவர் பேச்சை முடிக்கும்போது, ஒவ்வொருவரும் உணர்ச்சி வேகத்தால் தம்மையே தாம் மறந்து களம் புகுவோம் புகுவோம் உடனே புகுவோம் என்று ஆர்ப்பரிக்கும்படி செய்துவிட்டார். "நான் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். நம்முடைய ஓமந்தூரார்தானே அவரையா எதிர்ப்பது என்று எண்ணிப் பார்த்தேன். நம் அவினாசியார் தானே இவரிடமா போருக்கு நிற்பது என்று நினைத்துப் பார்த்தேன். நம் திராவிடர்கள்தானே அமைச்சர்கள் இவர்களுடனா மல்லுக்கு நிற்பது என்று சிந்தித்துப் பார்த்தேன், இவர்கள் வெற்றியை என் வெற்றியாகவும் இவர்கள் துக்கத்தை என் துக்கமாகவும் கொண்டு இவர்களுக்குத் தோன்றாத் துணையாகவும் தக்க ஆதரவாகவும் இருந்து பார்த்தேன் இப்போதுங்கூட இவர்களுடன் போராட்டம் தொடங்குவது என்றால் வருத்தமாகத் தான் இருக்கிறது. என்றாலும் என் செய்வது? என் பொறுமையை பலக்குறைவு என்று எண்ணிக் கொண்டு அளவுக்கு மீறிச் செல்லத் தொடங்கி விட்டார்கள். நம் தமிழ் மொழிக்கே கேடு விளைவிக்க முன்வந்து விட்டார்கள். இனி, பொறுத்திருக்க முடியாது. தமிழர் சக்திகள் அத்தனையையும் ஒன்று திரட்டி போராட்டம் தொடங்க வேண்டியதுதான். இது தான் கடைசிப் போர். ஆரிய திராவிட போராட்டங்களில் முக்கியமானதும் முடிவானதுமானது இந்தப் போராட்டம்தான். இதில் இரண்டில் ஒன்று பார்ப்பது என்ற முடிவோடுதான் நான் இறங்கியிருக்கிறேன்" என்று நம் **போர்த் தலைவர் பெரியார்,** போராட்டத்திற்கான சூழ்நிலை, போரின் தொடக்கம், வளர்ச்சி, முடிவு, படை வீரர் கடமை, போரின் கடுமை முதலியவற்றை நிரல் நிரலே எடுத்து விளக்கிய போது **அறப் போர்த் துறையில் பெருந் தேர்ச்சி பெற்ற இத்தகைய பிறவிப் போர் வீரரை நமக்குத் தலைவராக அளித்த தமிழகம் வாழ்க வாழ்க** எனும் விம்மித ஒலி ஒவ்வொரு தமிழன் நெஞ்சிலிருந்தும் உருண்டோடி வந்து வானிடை மிதந்திடும் தென்றலிலே குதித்தோடலாயிற்று.

பெரியார் பேருரைக்குப் பிறகு அடிகளாரின் முடிவுரையும், அதற்கு முன்பு, டாக்டர் கிருஷ்ணசாமி, ரெவரண்ட் அருள் தங்கையா, அப்துல் மஜீத் எம்.எல்.ஏ., வி.பி. எஸ். மணியர், ராமாமிர்தம் அம்மையார் ஆகியோர் பேச்சுகளும்நிகழ்ந்தன.

பின்னர், கீழ்க்கண்ட போர்முறைத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது:—

"இந்திய அரசியலார் தமிழ் நாட்டில் பள்ளி மாணவர்களுக்கு இந்தியைக் கட்டாய பாடமாக ஆக்க உத்தரவிட்டிருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக்கொண்டு பொது மக்கள் விருப்பத்துக்கு மாறாக வேற்று மொழி ஒன்றை தமிழ்ப் பள்ளிகளில் திணிப்பது சிறிதும் ஜனநாயகம் ஆகாதென்றும், இந்த சர்க்கார் இந்நாட்டு மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ற சர்க்கார் அல்ல என்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

இந்தியைத் தமிழ் நாட்டில் எந்த வகையிலும் புகுத்துவதை தமிழர்கள் விரும்பவில்லை என்பதையும், கடைசிவரை இந்தியை எதிர்த்துப் போராடியாக வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது என்பதையும் இம்மாநாடு சர்க்காருக்கு வலியுறுத்திக் காட்டுவதோடு, தமிழர்களின் இக்கருத்தை சர்க்கார் அறியும்படி தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிவிட்டது என்று இம் மாநாடு தீர்மானிக்கிறது.

இந்த அவசியத்தை நடவடிக்கையில் கொண்டுவரத் தக்க திட்டமிடவும் அதைச் செயலில் நடத்தவும் உரிமை கொடுத்து அடியில் கண்ட 13 பேர்களுக்குக் குறையாத செயற்குழுவை இம்மாநாடு அமைக்கிறது:—

ம. பொ. சிவஞானம்
நாரண துரைக்கண்ணன்
கி. ஆ. பெ. விசுவநாதம்
பெரியார் ஈ. வெ. ரா.
சி. என். அண்ணாதுரை
டாக்டர் கிருஷ்ணசாமி
சி. டி. டி. அரசு
ராமாமிர்தத்தம்மாள்
காஞ்சி மணிமொழியார்

மாநாட்டுச் செயலாளர் காஞ்சி மணிமொழியார் அவர்கள் நன்றி கூறியதும், மாநாடு இரவு 8 மணிக்கு முடிந்தது.

தமிழகத்தின் நாலா பகுதிகளினின்றும் திரண்டு குழுமியிருந்த தமிழ் மறவர் கூட்டம், அறப்போர் தொடுப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டுத் தத்தம் ஊர் நோக்கித் திரும்பிய காட்சி, **கிளம்பிற்றுக் காண் சிங்கக் கூட்டம், தேடுதுகாண் பகைக் கூட்டத்தை** என்ற கவிஞர் பொன்மொழிக்கு இலக்கியம் சேர்ப்பதுபோல் கவின்பெற அமைந்திருந்தது.

ஒழிக இந்தி!
வாழ்க தமிழ்!

—

"கதிரவன்"

மாதமிருமுறை வெளிவருகிறது.

தனிப்பிரதி விலை அணா 4. ஆண்டு சந்தா ரூ. 6

ஏஜண்டுகள் தேவை

"கதிரவன்" நிலையம்

94, C பிராட்வே, சென்னை — 1.

தொடர்கதை:

மனப்புயல்

இராதாமணாளன்

பதினைந்தாவது பகுதி

படகோட்டி

பிணத்தின் அருகில், மாண்
டவனின் மனைவியைத் தவிர மற்
றவர்கள் மௌனமாக உட்கார்ந்
திருந்தனர். அவள் ஓயாது
அழுதுகொண்டே இருந்தாள்.
சிறிது நேரம் சென்றதும்,
'ஆண்டி! நீயும் வேணியும் பத்
திரமாக வீட்டிற்குப் போங்கள்.
நேரமும் அதிகமாகி விட்டது.
இந்தக் குடிசையிலேயே நாங்கள் இருவரும் இருக்கிறோம். நாளை இரவு நீ மட்டும் வா!...... வேணி! அழாமல் போய் வாம்மா!'' என்று கோபால் கூறினன்.

வேணி தன் கண்களைத் துடைத்துக்கொண்டு, "வருகிறேன் அண்ணா'' என்று கூறினள். சேல்விழிகளை உருட்டி, "சென்று வரட்டுமா?'' என்று குமாரிடம் பேசாது பேசிவிட்டுப் புறப்பட்டாள். ஆண்டியும் வேணியும் சென்ற திக்கில் கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தான் குமார்.

"இளம்பெண்! அடிக்கடி பார்க்கிறாள். நானும் அவளைக் காதலிப்பதாகவே எண்ணுகிறாள். பாபம், அவள் அறியாள் என் உள்ளம் முன்பே ஒருவனுக்குச் சொந்தமாகி விட்டதென்ற உண்மையை.......உள்ளம் குரங்கைப் போன்றது என்கிறார்களே, அது உண்மைதானே? இல்லாவிட்டால் அவளை அடிக்கடி பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கேன் எழவேண்டும்? அவளைக் காண்பதில் எனக்கேன் இன்பம் பிறக்க வேண்டும்? அவள் கோவை இதழிலிருந்து விழும் வார்த்தைகள் எனக்குப் பலாச் சுளையைப் போல் இனிப்பானேன்? அவள் நீண்ட கண்களும் என் கண்களும் சந்திக்கும்போது உள்ளம் சிலிர்ப்பானேன்? தேன் கசிகிறதே, அது

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

இதை முடித்து வைப்பது நமக்குப் பெருமையுங்
டட. நமது பின் சந்ததியார் போற்றிப் புகழக்
டிய ஓர் அரிய சந்தர்ப்பத்தில் நாம் இன்று
இருக்கிறோம். இந்த சந்தர்ப்பத்தைச் சரியாகப்
யன் படுத்திக் கொள்ளாவிட்டால் நாம் எதிர்
லத்தில் பின் சந்ததியினரால் எள்ளி நகை
டப்படுவோம் என்பதோடு, அவர்களின் துன்
த்துக்கும் அடிமைத் தனத்திற்கும் நாமே காரண
ர்த்தர்களாகவும் ஆகிவிடுவோம்.'' என்று பெரி
ார் அவர்கள் கூறியிருப்பதை யார் மறுக்க
டியும்?

ாம் கெஞ்சிக் கேட்டுப்பார்த்தாகி விட்டது.
மாதானமாகச் சொல்லிப் பார்த்தாகி விட்டது.
ட்டங்களில் பேசிப் பார்த்தாகி விட்டது. பத்தி
கைகளில் எழுதிப் பார்த்தாகி விட்டது. விண்
ப்பங்கள் அனுப்பிப் பார்த்தாகி விட்டது. தீர்
ானங்கள் நிறைவேற்றிப் பார்த்தாகிவிட்டது.
த்தனையையும் பொருட்படுத்தாமல், அவினாசி
ார் கட்டாய இந்தி உத்தரவை பள்ளிகளுக்கு
அனுப்பிவிட்டார். இந்தி வகுப்புகளைத் தொடங்
ங்கள் என்று ஆணை பிறப்பித்துவிட்டார். தமி
ர் உள்ளக் கொதிப்பை உதாசீனப்படுத்தி விட்
ார். தமிழர் தலைவர்களின் எச்சரிக்கையைப்
பாருட்படுத்த மறுத்துவிட்டார். பேராசிரியர்
றைமலை அடிகளார், அறிஞர் திரு. வி. க., நாவலர் பாரதியார் போன்ற மூதுபெரும் புலவர்களின் அறிவுரையையும் அசட்டுத்தனமாக ஒதுக்கித் தள்ளிவிட்டார். இரண்டொரு மயிலாப்பூர்களும் மாம்பலங்களும் இந்து மித்திரன் ஏடுகளும் இந்தி வேண்டும் என்று எழுப்பிய வறட்டுக் கூச்சலைத்தான் ஏற்றுக் கொண்டுவிட்டார். தமிழ்ப் பெருங் குடிமக்களின் ஏகோபித்த எதிர்ப்புணர்ச்சியை அலட்சியப்படுத்தி விட்டார். இந்தியை நுழைத்து விட்டார். ஆம்! பெருந்தன்மை படைத்த தமிழ் மக்களின் காலை மிதித்து அவர்களை வலுச் சண்டைக்கு அழைக்கிறார். இனி, நாடெங்கும் திரண்டுள்ள தமிழர் பட்டாளங்களை போர் முகம் நோக்கி, 'செல்க' எனச் செலுத்துவது தவிர தமிழர் தலைவர்களுக்கு வேறு வழி இல்லை. ஆம்! ஆகவேதான் அவர்களும் அதோ களம் நோக்கிச் செல்லத் தொடங்கிவிட்டனர். தலைவர்கள் ஆணை தர வந்துவிட்டனர் என்பதைக் காணக் காண, அங்குள்ள படைவீரர் முகங்களும் 'அன்றலர்ந்த ரோஜா' வென மலர்ந்து மகிழ்ச்சி ஒளி வீசத் தொடங்கிவிட்டது. ஆயிற்று, ஆயிற்று, போர் தொடங்கும் நேரம் நெருங்குகிறது..........நெருங்குகிறது.......... நெருங்கிவிட்டது..........அதோ, தலைவர், ஆணை பிறப்பிக்க எழுந்துவிட்டார்......... இன்னும் ஒன்று அல்லது இரண்டு விநாடிகள் ....தமிழகம் போர்க்களமாக மாறிவிடும்.

எதனால்? ஆணும் வண்டும் ஒன்றாய்ப்பிறந்தவர்கள் என்றுபெண் உலகம் குற்றம் சாற்றுமே, அது நிசம்தானே? அது உண்மை இல்லாவிட்டால், என் உயிர்க் காதலி குமுதம் என்பிரிவால் அங்கு வருந்துவாள் என்பதை அறிந்திருந்தும், வேணியை என் மனம் நாடுகிறதே, அது ஏன்? பள்ளத்தைப்பார்த்து தண்ணீர் ஓடுகிறதே அதுபோல அழகைக் கண்டால் வாலிபம் துள்ளிப் பாயுமோ?............இப்படிப் பட்ட கீழ்த்தரமான எண்ணங்களின் பிறப்பிடமாகிவிட்டது என் உள்ளம் என்பதை குமுதம் அறிந்தால் என்ன பாடுபடுவாள்? அவள் மனம் எவ்வளவு பதைக்கும்? அவள் கண்கள் நீர் அருவி ஆகிவிடாதா? சேச்சே! இது தகாது! என்போன்ற கலைஞனுக்கு இது அழகல்ல......... கண்ணே! குமுதம்! நீதான் என் இதயராணி. வேணி அல்ல! உண்மையாக வேணிக்கு என் மனதில் இடம் தரமாட்டேன்! நம் காதல்மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன் இதனை நீ நம்பு. குமார் துரோகி ஆகமாட்டான். கலைஞன், கன்னி ஒருவளைக் காதலித்துக் கைவிடான்!.........''

குமாரின் மனதில் வீசிய எண்ணப் புயல் இது! ஆண்டியும் வேணியும் கிளைபாதை ஒன்றில் நடந்து கொண்டிருந்தார்கள். மேகக் கூட்டங்களுக்குள் புகுந்து புகுந்து நிலாப்பெண் விளையாடிக் கொண்டிருந்தாள். தான் பிரியும்போது குமார் பார்த்த பார்வை, வேணியின் கன்னி உள்ளத்தை ஏதேதோ செய்தது! அந்த இன்பப் பார்வையை நினைக்க நினைக்க அவளுக்குச் சொல்லொணு மகிழ்ச்சி தோன்றியது.

"ஆகா! அந்தக் கண்களுக்குத் தாம் என்ன ஆற்றலிருக்கிறது. அவரைப் பார்க்கவேண்டும், பார்க்க வேண்டுமென்று என் உள்ளம் அடிக்கடி துடிக்கிறதே! ஆண்டி, அருகில் இருக்கும் போதே, அவர் என்ன எண்ணுவார் என்பதையும் கவனியாது, அதைப் பற்றி கவலையும் படாது எவ்வளவு தைரியமாக அவரை அடிக்கடி பார்த்து விட்டேன்! காதல், பயத்தையும் வெட்கத்தையும் அறியாதா? அவருடைய அன்புப்பார்வை என்னை அடிமையல்லவா கொண்டுவிட்டது! அவர் இன்சொல் என்னைச் சிறைபிடித்து விட்டதே!.............. அத்தான் என்று நான் அழைக்க, கண்ணே என்று அவர் அருகில் வரும் நாள் எந்நாள்? திரண்ட அவர் தோள்களைத் தழுவி மகிழும் நாள் எந்நாள்? குமாரின் மனைவி வேணி என்று உலகம் கூறும் நாள் எந்நாள்? வாரி எடுத்து சேர்த்தணைத்து என் செவ்விதழ்களில் அவர் தரும் முத்தங்களைப் பெற்று மெய் மறந்து ஆனந்த வெள்ளத்தில் நான் மிதக்கும் நாள் எந்நாள்?......''

வேணியின் காதல் உள்ளத்தில் இப்படிப் பற்பல ஆசை அலைகள் எழுந்தன.

அன்றிரவு கழிந்தது. மறுநாள் காலை பிணம் அடக்கம் செய்யப்பட்டது. அந்த அபலைப் பெண்ணின் வரலாற்றைக் குமார் விசாரித்தான். அழுது கொண்டே அவள் கூறினாள்.

பிணமானவன் படகோட்டி காத்தான். அருகே இருந்தவள் அவன் மனைவி வேலாயி. படகோட்டுவதால் கிடைத்த சிறிய ஊதியத்தைக் கொண்டு அவர்கள் இருவரும் பிழைத்து வாலானார்கள். சொற்பமாக வரும்படி கிடைத்தாலும், அவர்களிருவரும் ஒற்றுமையோடு திருப்தியாகவே வாழ்ந்து வந்தார்கள். திடீரென்று பாம்பு கடித்து காத்தான் இறந்துவிடவே வேலாயி ஆதரவற்றவளாகி விட்டாள். அவளுக்கிருந்த சொத்து ஆற்றின் கரையோரமாகக் கட்டப்பட்டிருந்த ஒரே ஒரு படகும், பொத்தல் குடிசையும் தான். தான் இனி வாழ வழியில்லையே என்று கூறி அவள் அழுதாள். அழுத அவளுக்குத் தேறுதல் வார்த்தைகள் கூறிவிட்டு கோபாலை அழைத்துக் கொண்டு குமார் வெளியில் சென்றான்.

(தொடரும்)

தமிழன் தொடுத்த போர்!

★ மா. இளஞ்செழியன் B.A. (Hons) தீட்டியது!

1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் எழில் மிகு சித்திரம் இந் நூல். மறுபடியும் போர்முரசு கொட்டப்படும் இந் நாளில் தமிழர் ஒவ்வொருவரும் இதனைப் படித்துணரவேண்டியது மிக மிக அவசியம் என்பதை சொல்லத் தேவையில்லை.

240 பக்கங்கள் விலை 1 12 0 தபாலில் 2 0 0

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு :: சென்னை 1.

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hns